தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள் 29.09.2026

முன்னிலை

முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.SA-6363-C-2024

திரு. P. ரமேஷ் - மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர். - பொது அதிகார அமைப்பு

ஆணை

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 08.11.2023 நாளிட்ட மனுவில், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, கொல்லங்கரை வட்டம், கொல்லங்கரை கிராமம், கிராம எண் 113, சூரியம்பட்டி பகுதி சர்வே எண் 168/8-இன் 1950 முதல் 1979-ஆம் ஆண்டு வரை உள்ள பழைய அ-பதிவேடு வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

2. மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனக் கோரி பிரிவு 19(1)-ன்கீழ் 08.01.2024 நாளிட்ட முதலாம் மேல்முறையீடு மனுவும் பிரிவு 19(3)-ன்கீழ் 13.05.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீடு மனுவினை இவ்வாணையத்திலும் தாக்கல் செய்துள்ளார். இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (29.09.2026) காணொளி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3. இவ்வாணையத்தில் இன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜரானார்.. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. கோ. தவச்செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர் அவர்கள் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆண்டிற்கான அடங்கல் பதிவேடு நகல் உள்ள நிலையில் தனக்கு அ-பதிவேடு வழங்கப்படவில்லை எனவும் அதனை பெற்று தருமாறு ஆணையத்தை கோரினார். விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள

நிலத்திற்கு OSR, RSR மட்டுமே உள்ளதாகவும், ஏற்கனவே 06.12.2023 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் குறிப்பிட்ட கிராமம் இனாம் கிராமம் அல்ல என்பதால் அக்கிராமத்திற்கு அ-பதிவேடு இல்லை என்ற தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, மேலும் மேல்முறையீட்டு அலுவலர் தனது 12.12.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் குறிப்பிட்ட கிராமம் இனாம் கிராமம் அல்ல என்பதால் அக்கிராமத்திற்கு அ-பதிவேடு இல்லை என்றும் அக்கிராமத்தின் RSR பதிவேடு மட்டுமே பராமரிப்பில் உள்ளதால் அதனை மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளதாகவும் கூறி அக்கடிதங்களின் நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். ஆணையம் இதனை பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்து ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனங்களுக்கான சட்டப்பூர்வமாக கொடுக்கப்பட வேண்டிய தகவல்களுக்கு மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி அலுவலக வேலை நாளில் இதர பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து மனுதாரரின் ஆய்வுக்கு கோப்புகளை, ஆவணங்களை சட்டப்பிரிவு 2(j)ன்படி ஆஜர்படுத்தி, மனுதாரர் குறிப்பிட்டு கோரும் தகவலை ஒளிநகலெடுத்து சான்றொப்பமிட்டு சட்டப்பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி வழங்குமாறும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் நகல் மற்றும் மனுதாரர் அத்தகவல்களை பெற்றுக் கொண்டு ஏற்பளிப்பு செய்த விவரம் ஆகியவற்றினை ஒரு அறிக்கையாக ஆணையத்திற்கு 30.10.2026-க்குள் பதிவஞ்சலில் சமர்ப்பிக்குமாறும் தவறும்பட்சத்தில் உரிய நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு இவ்வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண் SA-6363-C-2024</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

<u>மனுதாரர்</u>

திரு. P. ரமேஷ்,
4/572, தெற்கு தெரு,
சூரியம்பட்டி,
விளார் அஞ்சல்,
தஞ்சாவூர்-613006

SD/PS